# குறுகிய-கால ஊட்டச்சத்துசார் பணப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம்



## போசாக்குத் தேவைகளை ஈடுசெய்வதற்கான குறுகியகால காசுப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டம் என்றால் என்ன?

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF), இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 2021 மே மாதம் 01 ஆம் திகதிக்கும் **2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்த** பிள்ளைகளின் தாய்மார்/ பராமரிப்பாளர்களுக்கு அடுத்து வரும் மாதங்களில் அவர்களின் போசாக்குத் தேவைகளை ஈடுசெய்வதற்கான காசுப் பரிமாற்றல்களை வழங்கவுள்ளது. குழந்தையின் முதல் 24 மாதங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான வவுச்சரின் தொடர்ச்சியாக தாய்/ பராமரிப்பாளரின் போசாக்குத் தேவைகள் ஈடுசெய்யப்படுவதை உறுதிப்படுத்துவதும், இவ் இக்கட்டான நிலைமையில் குழந்தைக்கு உரிய பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதுமே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். மேலும், இந் நிகழ்ச்சித்திட்டத்தில் போசாக்கு ரீதியாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். அவ்வகையில், **புத்தளம், அநுராதபுரம், மொனராகலை, கேகாலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு** ஆகிய மாவட்டங்கள் முன்னுரிமை மாவட்டங்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறே, ஒவ்வொரு தாயும் அல்லது பராமரிப்பாளரும் இந் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக போசாக்கு மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

## உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்?

இந் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் மேற்கூறப்பட்டவாறு தகுதி பெறும் தாய்/ பராமரிப்பாளருக்கு அவர்களின் ஒவ்வொரு தகுதியான பிள்ளைக்காகவும் 4 மாதங்களுக்கு மாதாந்த காசுப் பரிமாற்றலாக ரூபா. 6,750.00 கிடைக்கும். உதாரணமாக, இந் நிகழ்ச்சித்திட்டம் ஏதாவதொரு மாவட்டத்தில் 2023 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டால், அது 2023 மே மாதம் வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். எனவே,

- → உங்கள் பிள்ளையின் வயது ஏற்கனவே பெப்ரவரி மாதத்தில் 5 மாதங்களாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால் உங்களுக்கு பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதம் வரை இத் தொகை கிடைக்கும்.
- → உங்களின் பிள்ளை மார்ச் மாதத்தில் தான் 5 வயதினை அடைவதாக இருந்தால் உங்களுக்கு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மாத்திரமே குறித்த பணத் தொகை கிடைக்கும்.

## யாருக்கெல்லாம் பதிவுசெய்ய முடியும்?

**2021 மே மாதம் 01 ஆம் திகதிக்கும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்த பிள்ளைகளின் தாய்மார்/ பராமரிப்பாளர்கள்** தம்மை இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்துகொள்ள தகுதிபெறுகின்றனர். இவ்வாறு தகுதிபெறும் தாய்/ பராமரிப்பாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

## பணம் எவ்வாறு பரிமாற்றப்படும்?

காசு/ கொடுப்பனவுகள் எப்போதும் **வங்கிப் பண மாற்றல்களினூடாகவே** இடம்பெறும். முதலாவது கொடுப்பனவு 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் செலுத்தப்படும். கொடுப்பனவு கிடைக்கும் மிகச் சரியான காலம் உங்களின் இடம் அல்லது வசிப்பிடத்தைப் பொறுத்ததாகும்.

## உங்களைப் பதிவுசெய்பவர் யார்? எவ்வாறு பதிவு செய்யப்படும்?

பயனாளிகளின் பதிவு நடவடிக்கை பெரும்பாலும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் அரச காரியாலயங்களினூடாகவே இடம்பெறும். இது முற்றிலும் இலவசமானது. நீங்கள் வசிக்கும் இடத்தினைப் பொறுத்து பதிவு நடவடிக்கைகளுக்காக உங்களுக்கு பிரதேச செயலகத்திற்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியேற்படும். என்றாலும், சில பிரதேசங்களில், பொதுச் சுகாதார மருத்துவ தாதி அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் உங்கள் வீட்டுக்கு வருகை தந்து தாம் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் நடைமுறைப்படுத்துகின்ற போசாக்குத் தேவைகளை ஈடுசெய்வதற்கான காசுப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான பயனாளிகளை பதிவு செய்வதற்கு வந்திருப்பதாகத் தெளிவுபடுத்தி பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். **பதிவு செய்யும் போது தகுதிபெறும் தாய்/ பராமரிப்பாளர் தாமாகவே பிரசன்னமாகி இருக்க வேண்டும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.** பதிவு நடவடிக்கைகள் பூர்த்தியானதும் கணக்கெடுப்பாளரால் உங்களுக்கு ஒரு அடையாள எண் வழங்கப்படும். பயனாளிகள் குறித்த அடையாள எண்ணை இந் நிகழ்ச்சித்திட்டம் முடிவடையும் வரையில் தம்வசம் வைத்திருக்க வேண்டும். உங்களின் பதிவு தொடர்பில் ஏதேனும் தகவல்களை அறிந்துகொள்ள வேண்டியிருப்பின், பயனாளிகளுக்கு 1318 எனும் கட்டணமற்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்த முடியுமென்பதுடன் அப்போது உங்களின் அடையாள எண்ணை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்.



## உங்கள் வங்கிக் கணக்கினை எவ்வாறு பதிவு செய்துகொள்வது?

ஒவ்வொரு **தாயும்/ பராமரிப்பாளரும் செயற்படு நிலையிலுள்ள வங்கிக் கணக்கின் விபரங்களை வழங்க வேண்டும். ஒரு தாய்க்கு அல்லது பராமரிப்பாளருக்கு ஒரு வங்கிக் கணக்கு இல்லையெனின், ஒரு வங்கிக் கணக்கினை திறக்குமாறு நாம் ஊக்குவிக்கிறோம்.** இதற்கு மாற்றீடாக, பயனாளிகளுக்கு அதே வீட்டில் வசிக்கின்ற வேறொருவரின் வங்கிக் கணக்கினை வழங்க முடியும். கீழ்வரும் தகவல்கள் தேவைப்படுகின்றன.

- வங்கியின் பெயர், வங்கிக் கிளை, கிளைக் குறியீட்டு எண் மற்றும் கணக்கிலக்கம்.
- வங்கிக் கணக்குப் புத்தகம்.
- வழங்கப்பட்ட வங்கிக் கணக்கிலக்கம் குறித்த தாய்/ பராமரிப்பாளரின் சொந்த வங்கிக் கணக்காக இல்லாது, வீட்டின் வேறொரு அங்கத்தவரின் வங்கிக் கணக்கிலக்கம் எனின், குறித்த அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்.

குறிப்பு - **சமூர்த்தி வங்கி மற்றும் கூட்டுறவு கிராம வங்கி கணக்குகள் தவிர்த்து வேறு எந்த வங்கிக் கணக்குகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

## பதிவுக்குத் தேவைப்படும் ஆவணங்கள் யாவை?

- **தகுதிபெறும் பிள்ளை/ பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் (இருந்தால்).** உங்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லாவிட்டால் வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற பிறப்பு அட்டை/ தாயின் அட்டையினை வழங்க முடியும்.
- **தாய்/ பராமரிப்பாளரின் தேசிய அடையாள அட்டை** (இருந்தால்) - தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் தாய்/ பராமரிப்பாளரின் பிறப்புச் சான்றிதழைக் கொண்டுவர முடியும்.
- உங்களின் நிரந்தர வதிவிட முகவரியானது உங்களின் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழின் முகவரிகளிலிருந்து வேறுபட்டிருந்தால் உரிய கிராம உத்தியோகத்தரிடமிருந்து வதிவிடச் சான்றிதழை எடுத்துவர வேண்டும்.
- தாயை/ பராமரிப்பாளரை தொடர்புகொள்ள முடியுமான **தொலைபேசி இலக்கம்.**

## பயனாளியை உறுதிப்படுத்துதல்

**ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் பயனாளியின் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக மல்டி டெக் சொலூஷன் எனும் தனியார் நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.** எனவே, அவர்கள் உங்களை தொலைபேசியில் தொடர்புகொள்வார்கள் அல்லது நேரடியாக வந்து சந்திப்பார்கள். பயனாளியின் தகுதியைப் பரீட்சிப்பதற்காக மாத்திரமே இவ்வாறு தகவல்கள் உறுதிப்படுத்தப்படும். எனவே, இந் நிகழ்ச்சித்திட்டத்தில் தம்மை பதிவுசெய்துகொண்டுள்ள தாய்/ பராமரிப்பாளர் தமது தகவல்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

## மேலதிக தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்? அல்லது முறைப்பாடுகள் அல்லது குறைகளை எவ்வாறு முன்வைக்கலாம்?

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) தாய்மாருக்கு/ பராமரிப்பாளர்களுக்கு இந் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களை வழங்கவும், அவர்களின் முறைப்பாடுகள் அல்லது குறைகளை உரிய தீர்வுகளை முன்வைக்கவும் சர்வோதய நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது. எனவே, **உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது உதவி தேவைப்பட்டால் 1318 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்பவோ அல்லது நேரடியாக அழைக்கவோ முடியும்.** இது கட்டணமற்ற உடனடி தொலைபேசி இலக்கமாகும். இது வாரத்தில் ஐந்து நாட்களிலும் மு.ப 9 முதல் பி.ப 4 வரை செயற்பாட்டிலிருக்கும். நீங்கள் கூறும் முறைப்பாடுகள்/ குறைகள் என்பவற்றில் இரகசியத்தன்மை பேணப்படும் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம்.

மேலும், குறித்த கொடுப்பனவு கிடைத்ததா என உறுதிப்படுத்துவதற்கும் போசாக்கு நடவடிக்கைகளை நடாத்துவதற்குமென சர்வோதய நிறுவனமும் குறித்த பயனாளிகளைத் தொடர்புகொள்ளும்.

**உதவி மற்றும் முறைப்பாடுகளை தெரிவிக்க அழைக்க வேண்டிய அவசர தொலைபேசி எண்**

**1318**

(திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9 முதல் பி.ப 4 வரை அழைக்க முடியும்)

Australian Government
AusAID

USAID
FROM THE AMERICAN PEOPLE

සර්වෝදය
சர்வோதயம்
Sarvodaya

unicef
for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்